மலர் 1 இதழ் 1 ஜுலை, 2016 ISSN : 2454-3993

# சங்க இலக்கியத்தில் நால்வகைப் பெண்டிரின் பங்களிப்பு

**முனைவர் கி. முகிலரசி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஏ.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி,
சேலம்.

**முன்னுரை**

மனிதன் கால்பதித்த காலம் முதல் இன்றுவரை நிலைத்து நிற்கும் பண்பாட்டுக் கூறுகளில் தமிழ்ச் சமூகமும் ஒன்று. அதற்கு பெரும் சிறப்பாக விளங்குவது சங்க இலக்கியங்கள்தான். சங்க இலக்கியங்கள் தமிழனின் சிந்தனைச் சிதறல்; கற்பனையின் மலர்ச்சி; உணர்ச்சிகளின் குவியல்; வாழ்க்கையின் விளக்கம். சமுதாயத்தில் உள்ள வாழ்க்கை நிகழ்ச்சியைக் கலையழகுடன் எடுத்துக் காட்டுபவையாகும். இலக்கியம் என்ற சொல்லுக்கு இலக்கு+இயம் இலக்கியம் என்று கூறலாம். இலக்கு என்பது கொள்கை, குறிக்கோள் என்றும், இயம் என்பது வெளிப்படுத்துதல் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. எனவே இலக்கியம் என்பது மனித சமுதாயத்தின் கொள்கையினை வெளிப்படுத்துதல் ஆகும். அவ்வகையில்தான் சங்க இலக்கியங்களும் தமிழனின் கொள்கையினை அதாவது அன்பு, குடும்பம், சகோதரத்துவம், பண்பாடு, கலை, நாகரிகம், பொருளாதாரம் என அனைத்தையும் வெளிப்படுத்துகிறது. இவ்வகையில் சங்க இலக்கியத்தில் நால்வகைப் பெண்டிரின் பங்களிப்பு குறித்து ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

**நால்வகைப் பெண்டிர்**

மனித சமூகமானது ஆண், பெண் என இருபாலராக தனித்து நிற்கின்றனர். ஆண், பெண் என்ற வேறுபாட்டில்தான் இருவரும் பல இடங்களில் தனித்திருக்கின்றனர். மானிட இனம் பல காலமாக கண்ட வேறுபாட்டைத்தான் சங்க இலக்கியங்களும் பிரதிபலிக்கின்றன. அவ்வகையில் ஆணுக்கும் , பெண்ணுக்கும் எந்தப் பிரிவையும் காட்டாத நிலை இருந்தாலும் ஆண் பெரும் முக்கியத்துவமும் சிறப்பும் பெண் முழுமையாகப் பெறவில்லை என்றே கூற வேண்டும். பெண் ஆணின் சிறப்புகளை எடுத்துக் கூறவும். இல்லறத்தை நல்லறமாக பேணவும், வாழ்வைக் குடும்பம் என்ற வழியில் நடத்தி செல்லும் நல்ல தலைவியாகவும் மட்டுமே விளங்குகிறாள். அவளின் அறிவையோ, வீரத்தையோ, கொடைத்தன்மையையோ போற்றிக் கூறுவதாக இல்லை. ஏனென்றால் தமிழ்ச் சமூகம் அகம், புறம் என்ற இருபிரிவில்தான் உள்ளது. இதில் அகம் என்பதில் களவு, கற்பு என்றும் தலைவன்,தலைவி அதாவது ஆண், பெண் காதல், குடும்பம், விரும்தோம்பல், இல்லற மேன்மைகள்தான் இடம் பெற்றுள்ளன. புறம் என்ற போது ஆண் மட்டுமே தனது வீரம், கொடை, புகழ், போர்ச்சிறப்பு என அனைத்தும் ஆணுடையதாக விளங்குகிறது. புறத்தில் பெண் பெறும் இடம் மிகக்குறைவாகத் தான் உள்ளது. ஒருவேளை பெண் பேசும் இடமாக இருந்தாலும் அதுவும் ஆணின் சிறப்பைத் தான் கூறுகிறது. எனவே அவ்வகையில் பெண் தனது நிலையை அகத்தில் மட்டும்தான் காதல், இல்லறம் என்ற

வகையில்தான் கூறுகிறாள். இத்தகு நிலையில் பெண் என்ற நிலையில் காணும்போது நால்வகைப் பெண்டிர் இடம்பெற்றுள்ள சிறப்பையும், பங்களிப்பையும் காண்போம். நால்வகைப் பெண்டிர் என்ற நிலையில் காணும் பெண்கள் பின்வருமாறு.

1. தலைவி
2. தோழி
3. நற்றாய்
4. செவிலித்தாய்

**தலைவி**

சங்க இலக்கியங்களில் பெண் குறித்து பார்க்கும்போது பெண்ணுக்கென்று சில நியதிகளும், குணங்களும் கற்பிக்கப்பட்டவையாக இருக்கின்றன. தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலும் தமிழில் பெருமை பேசும் செவ்விலக்கியங்களில் ஒன்றான தொல்காப்பியப் பொருளாதிகார களவியலில் பெண்ணுக்கென்று சில குணங்களை கட்டிக்காட்டுகிறது.

**'அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப'**

இதன்வழி அறியும்போது அச்சமும் நாணும் பேதைமையும் இம்மூன்றும் பெண்களுக்கே உள்ள இயல்பாகப் பழங்காலம் முதல் இன்றுவரை இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நூற்பா வழி காணும்போது பெண் யாராக இருந்தாலும் அவளுக்கென்ற இயல்பை மீறி செல்லக்கூடாது என்பது தெரிய வருகிறது. இதை தலைவியின் மூலம் காணும்போது தலைவனுடன் களவு வாழ்க்கையில் ஈடுபட்டாலும் அல்லது கற்பு வாழ்க்கையில் வாழ்ந்தாலும் இன்ப உணர்வுகளோ, இல்லையெனில் பிரிவு ஆற்றா நிலையில் துன்ப உணர்வுகளோ எதுவாக இருப்பினும் தலைவி தன் தோழி, தன் மனம் எனத் தனக்குள்ளே மட்டுமே வெளிக்காட்ட வேண்டுவதாய் உள்ளது.

**'அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து**
**பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்**
**உரவோர் உரவோர் ஆக**
**மடவம் ஆக மடந்தை நாமே'**

என்று தலைவி கூறும்போது, தன்னைப்பிரிந்து சென்ற தலைவன்மீது கோபம் கொள்ளாமல் தோழியிடம் பிரிந்து செல்லும் குணம் தலைவனுக்கு அழகன்று என்று மென்மையாக வெளிப்படுத்துகிறாள். அதேவேளையில் தலைவன் பிரிவை ஆற்றாத நிலையில் பிரிவுத்துயரை யாரும் உணரா நிலையில் தலைவி தன் எண்ணத்தை வெளிக்காட்ட முடியவில்லை. ஊரார் அனைவரும் அமைதியாய் உறங்கும்போது தலைவி மட்டும் தலைவனின் பிரிவை எண்ணி வருந்துகின்றபோது என் பிரிவை அறியாத ஊர் மக்களைக் கண்டு ஓவென்று சத்தமிட்டுக் கத்த வேண்டுமென தன் மனத்திற்குள்ளேயே கூறுகிறாள். தலைவன் வரைபொருளுக்காகப் பிரிந்த காலத்தில் தனிமைத் துயரில் வாடிய தலைவி, இரவில் ஊரார் அனைவரும் மனநிறைவுடன் உறங்கும்போது தான் மட்டும் உறக்கமின்றி தலைவனை எண்ணி உறவுநோயால் வருந்துகிறாள். தலைவியின் வருத்தத்தை அறியாத இவ்வூரை அவள் கோபம் கொண்டு பேசுகிறாள்; தன் இயலாமையை வெளிப்படுத்துகிறாள்.

**'முட்டு வேன் கொல் தாக்குவேன்கொல்**
**ஓரேன் யானம் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ! ஒல்' எனக் கூவுவேன்கொல்**
**உயவுநோய் அறியாத துஞ்சும் ஊர்க்கே'**

நல்ல பசுவின் பாலானது அப்பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல், பாத்திரத்திலும் கறந்து கொள்ளப்படாமலும் தரையில் சிந்தி வீணாவதைப் போல தலைவியின் அழகானது தலைவனாலும் விரும்பப்படாமல், உடலிலும் அழகு தங்காது பசலையால் தன் அழகு கெடுவதைக் கண்டு வருந்துகிறாள். இவ்வருத்தத்தை யாரும் அறியாவண்ணம் தனக்குள்ளும் தோழியிடமும் ஆற்றாமையால் வெளிப்படுத்துகிறாள். இதனைப் பலரும் அறியும்படி கூறக்கூடாது என்பதை அவள் அறிந்துள்ளாள்.

**'கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**
**நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காஅங்கு**
**எனக்கும் ஆகாது என்னைக்கும் அதாவது**
**பசலை உணீஇயர் வேண்டும்**
**திதலை அல்கல் என் மாமைக் கவினே'**

மேற்கண்ட பாடல்களின் வழி காணும்போது தலைவி தன் எண்ணம், உணர்வு என எதுவாக இருப்பினும் அதைத் தன் நெஞ்சிடமும் தனது தோழியிடமும்தான் கூறினாளே தவிர ஊரார் அறிய எங்கும் தன் விருப்பத்தைக் காட்டிக் கொண்டதில்லை.

**தோழி**

சங்க இலக்கியங்களில் தலைவி பெறும் முக்கியத்துவத்தில் தோழி பங்கு மிகப் பெரியது. தோழி யார்? அவளது பின்னணி ஏதும் பெரிதாகப் புலப்படாத நிலையில் தொல்காப்பியத்தில் மட்டும் 'தோழி தானே செவிலியது மகளே' என்பது தெரியும்போது தோழியின் தந்தை மற்றம் தோழிக்குரிய தலைவன் யார் என்பது தெரியவில்லை.

தோழி எப்பொழுதும் தலைவன், தலைவி நலன் குறித்து வாழும் ஒரு குணமகளாகக் காணப்படுகிறாள். தலைவி, தலைவனுக்காக வருந்தினால் அவளைத் தேற்றுவது அவளுக்காக நற்றாயிடமும், செவிலியிடமும் அதிகமாகத் தலைவனிடம் பேசும்போதும் நல்ல தூதாகத் தெரிகிறாள்.

தோழியின் பண்புகளுள் சிறந்ததாகப் போற்றப்படுவது அறத்தொடு நிற்றல். தலைவிக்கு காப்பு மிகும்போதும், காதல் மிகுதியாலும், நொதுமலர் வரைவின்போதும், தமர் வரைவு மறுத்தபோதும், செவிலி குறிபார்க்கும் இடத்திலும், வெறியாட்டிடத்திலும், பிறர் வரை வந்த வழியிலும், அவரது வரைவு மறுத்த வழியிலும், தோழி முழுவதும் சொல்லாது முழுவதும் சொல்லியும் நிற்பது ஆகும். தோழி அறத்தொடு நிற்றலுக்காகத் தலைவியின் நலம் வேண்டலே காரணம். அறத்தோடு நிற்கும்போது தலைவியின் இசைவோடுதான் நிற்பாள் தோழி.

**'அவள் விலங்கினும் களம் பெறக்காட்டினும்**
**புரைதீர் கிளவி தாயிடைப்பு குப்பினும்'**

என்று தோழி தலைவியின் இசைவுடன் அறத்தோடு நிற்பதை அறிய முடிகிறது.

**'அன்னை வாழிவேண்டன் னை முழங்க கடல்**
**திரைதரு முத்தம் வெண்மணல் இமைக்குந்**
**தண்ணந்துறைவன் வந்துஎனப்**
**பொன்னினும் சிறந்தன்று கண்டிசின்நுதலே'**

**அறத்தொடு நிற்றல் வகைகள்**

அறத்தொடு நிற்றல் ஏழு வகைப்படும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. அவை:

**'எளித்தல் ஏத்தல் வேட்கையுரைத்தல்**
**கூறுதல் உசாவுதல் ஏதீடு தலைப்பாடு**
**உண்மை செப்புங் கிளவியோடு தொகைஇ**
**அவ்வெழு வகைய என்மனார் புலவர்'**

எளியன் என்று கூறியும் தலைவனை உயர்த்திக் கூறியும், தலைவி தலைவனிடம் கொண்ட வேட்கை கூறியும், தலைவியைத் தலைவனுக்கு கொடுக்க வேண்டும் என்பதும், வெறியாட்டத்து செவிலி கேட்ட தோழி கூறலின் போதும், ஏதாவது ஒரு காரணம் வைத்துத் துறலும், பட்டாங்கு கூறுதல் வழியும் தோழி அறத்தொடு நிற்றல் நிலையும் உண்டு.

**செவிலித்தாய், நற்றாய்**

'தோழி தானே செவிலியது மகளே' என்று தொல்காப்பியத்தில் கூறியிருந்தாலும் செவிலியும் தோழி போலவே தலைமகளைப் பேணுதல், அவளது நலனில் இன்றுதல், தலைவியை நன்முறையில் வளர்க்க நற்றாய்க்கு உதவுதல் எனத் தலைவியை வளர்க்கும் முக்கியப் பொறுப்பு அனைத்திலும் செவிலியில்லாமல் இல்லை. ஏனெனில் செவிலி சங்க இலக்கியத்தில் மட்டுமல்ல தலைவி மனதிலும் இன்னொரு தாயாகவே இருந்துள்ளாள். உடன்போக்கு சென்ற தலைவி, தலைவனது வீட்டில் எவ்வாறு இல்லறம் நடத்துகிறாள் என்பது முதற்கொண்டு சென்று கண்டறிந்து வருவது அனைத்தும் செவிலியின் பணியாகத்தான் இருக்கிறது. இதனை,

**'காலே பரி தப்பினவே கண்ணே**
**நோக்கி நோக்கி வாள் இழந்தனவே'**

என்ற கூற்றில் உடன்போக்கில் தலைவனுடன் சென்ற தலைவி எங்கேனும் தென்படுகிறாளா அல்லது அவளைக் கண்ட செய்தியை யாரேனும் சொல்வார்களா என்று செவிலி இடைச்சுரத்தைப் பார்த்தவாறு நிற்கிறாள்.

**'கழிய காவி குற்றும், கடல**
**வேண்தலைப் பணரி ஆடியும், நன்றே**
**பிரிவு இல் ஆயம் உரியது ஒன்று, அயர**
**இவ்வழிப் படுதலும் ஒல்லாள் அவ்வழிப்**
**பரல்பாற் படுப்பச் சென்றனர் மாதோ**
**செல் மழை தவழும் சென்னி**
**விண் உயர் பிறங்கல் விலங்கு மலை நாட்டே'**

என்பது தலைவியின் பிரிவையே குறிக்கிறது. திருமணம் முடித்து இல்லறம் நடத்தும் தலைவியின் நிலை காண கடிநகருக்குச் செல்லும் செவிலி, நற்றாயிடம் தங்களது மகள் இல்லறம் செய்யும் பண்பைப் பெருமிதத்துடன் கூறுகிறாள்.

**கானங் கோழிக் கவர் குரற் சேவல்**
**ஓண் பொறி எருத்தில் தண் சிதர் உறைப்பப்**
**புதல் நீர் வாரும் பூ நாற புறவில்**
**சீறாரோளே, மடந்தை வேறு ஊர்**
**வேந்து விடு தொழிவோட செலினும்**
**சேந்து வரல் அறியாது செம்மல் தேரே'**

என்று தனது வளர்ப்பின் உச்சம் அடைகிறாள். மேலும் தலைவியின் வாழ்க்கைக்காக தெய்வத்திடம் தன் குழந்தையின் வாழ்க்கை போல வேறுபாடின்றி நல்லமனதுடன் வேண்டிக் கொள்கிறாள்.

**'ஞாயிறு காயாது மர நிழற் பட்டு**
**மலைமுதல் சிறு நெறி மணல் மிகத் தாஅய்**
**தண் மழை தலையவாக நம் நீத்துச்**
**சுடர் வாய் நெடு வேற் காளையொடு**
**மட மா அரிவை போகிய சுரனே'**

என்று கூறும்போது தன்னலமற்ற அவளது தூய உள்ளம் தெளிவாகிறது. அடுத்ததாக நற்றாய் என்று காணும் இடத்தில் நற்றாய்க்கென்ற தனி உரையோ, கருத்து தெரிவிப்போ பெரிதாக இல்லை. செவிலியே நற்றாயின் பணிகளைப் பெரிதுமாக செய்வதால் இவளுக்கு சிறப்பிடம் பொதுவாக இல்லை எனலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் நால்வகைப் பெண்டிரின் பங்களிப்பு என்று காணும்போது தலைவியே முதலிடமும் அவளின் நலனுக்காக வாழும் குலமகள்களாகத் தோழி, செவிலித்தாய், மற்றும் நற்றாயும் இருப்பது தெரிகிறது. சங்க இலக்கிய அக நூல்களின் அமைப்பே தலைவன், தலைவி என இவர்களைச் சுற்றி வருவதால் மற்ற பெண்களின் வாழ்க்கையை ஆராயும்போது தலைவியை விடுத்து மற்றவர்களை அறிய முடியாததைக் கட்டுரையின் வழி அறிய முடிந்தது. தலைவி, தலைவன் என இருவரின் வாழ்க்கைப் பின்னணியில்தான் மற்ற பெண்களின் வாழ்வு. சங்க இலக்கியங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது.